பத்திரிகை செய்தி
(21.06.2019)

நேரு விளையாட்டரங்கில் இன்று (21.06.2019) உலக யோகா தினத்தை முன்னிட்டு விளையாட்டு விடுதியில் பயிலும் மாணவ மாணவியருக்கு யோகா பயிற்சி முகாமினை **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

-----

நேரு விளையாட்டரங்கில் இன்று (21.06.2019) உலக யோகா தினத்தை முன்னிட்டு விளையாட்டு விடுதியில் பயிலும் மாணவ மாணவியருக்கு யோகா பயிற்சி முகாமினை **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன்** அவர்கள் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் திரு. சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன் அவர்கள் யோகா முகாமினை தொடங்கி வைத்து பேசுகையில், உலக யோகா தினம் இன்று உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில், யோகா என்பது பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள் மட்டுமின்றி அனைத்து தரப்பு மக்களிடத்திலும் யோகா முன்னிலை பெற்று விளங்குகிறது. மனதினை வலிமையாக வைத்துக் கொள்ளவும், அதுபோல் மனதினை ஒருநிலைப்படுத்தி உறுதியாக வைத்துக் கொள்ளவும் யோகா பயிற்சி உதவுகிறது. மூச்சுப் பயிற்சி மற்றும் இதர வகைப் பயிற்சிகளை தொடர்ந்து செய்வதின் மூலம் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள முடிகிறது. இளைஞர்கள் வலிமையாக இருந்தால் தான் நாடும் வலிமையாக இருக்கும். தமிழக அரசு பள்ளி மாணவ மாணவியர்களுக்கும் யோகாவை பல்வேறு நிலையில் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இங்கே குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால், அரசு வேலை வாய்ப்பில் உள் ஒதுக்கீடாக 3 சதவீதம் வரை வேலை வாய்ப்பு விளையாட்டு வீரர்களுக்கும் வழங்கப்படும் என அறிவித்து அதனை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. மேலும் விளையாட்டை மேம்படுத்துவதற்கு உயர்மட்ட ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டு அவர்களுடைய சீரிய ஆலோசனையின் படி விளையாட்டுத் துறையில் பல்வேறு நடவடிக்கைகள் இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது. மறைந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளித்தும் சர்வதேச அளவில் போட்டிகளில் பங்கேற்று பதக்கங்கள் பெறுபவர்களுக்கு இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு அதிகமான ஊக்கத்தொகை வழங்கி விளையாட்டுத்

துறையை ஊக்குவித்தார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் வந்த தமிழக அரசு விளைாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து மேலும் மேம்படுத்துவதற்கு தேவையாக அனைத்து திட்டங்களையும் சிறப்பாக செயல்படுத்தி வருகிறது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய பொது மேலாளர் திரு. கே. புகழேந்தி, முதுநிலை மேலாளர்கள் திரு. சேவியர் ஜோதி சற்குணம், திரு. சாமுவேல் ராஜா டேனியல், திருமதி. ஜே. மெர்ஸி ரெஜினா, விளையாட்டரங்க மேலாளர்கள் பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு விடுதி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு – தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை – 84





நேரு விளையாட்டரங்கில் இன்று (21.06.2019) உலக யோகா தினத்தை முன்னிட்டு விளையாட்டு விடுதியில் பயிலும் மாணவ மாணவியருக்கு யோகா பயிற்சி முகாமினை **மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன்** அவர்கள் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. சந்திர சேகர் சாகமூரி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்.